செ.வெ.எண்.343 நாள்.17.07.2017

**காஞ்சிபுரம் மாவட்டத்தில்**
**தமிழ்நாடு அரசு இலவச மருத்துவ உதவிக்கு தொலைபேசி எண் 104**
**24 மணி நேர இலவச மருத்துவ தகவல் மற்றும் ஆலோசனை குறித்த துண்டு பிரசுரத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்தார்.**

***************

மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் அம்மா அவர்களால் 24 மணிநேர “104” தொலைபேசி மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம் 30.12.2013 அன்று தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

24 மணிநேர “104” தொலைபேசி மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம் அளிக்கும் சேவைகள்:

எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்ற மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் மூலமாக சுகாதாரம் சார்ந்த அறிவுரைகள் மற்றும் தகவல்கள் வழங்கப்படுகிறது. 24 மணிநேர அவசர கால பணிகளில் குறிப்பாக ஆபத்தான நிலையிலுள்ள மனிதர்களுக்கு மற்றும் பேறு கால சிரமங்களை எதிர்கொள்ளும் தாய்மார்களுக்கு உரிய சுகாதார வசதிகள் குறித்து தகவல் அளிக்கப்படும். மேலும் 108 அவசரகால ஊர்தியுடன் இணைப்பு ஏற்படுத்தி தரப்படுகிறது. சுகாதார சேவைகள் வழங்குவதில் குறைகள் இருந்தால் அவற்றை சரி செய்யவும் 24 மணிநேரமும் இது தொடர்பான குறைகளை தீர்க்கவும் உடனடி உதவி செய்யப்படுகிறது.

சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக குடிமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பகிர்ந்து கொண்டு, தரமான சேவை பாதுகாப்பு கருணைமிகுந்த நடவடிக்கைளுக்கு ஊக்கமளிக்கப்படும். மேலும், சம்மந்தப்பட்ட துறைகளுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு சரியான தொடர் நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்படுகிறது. ஊட்டச்சத்து, எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ், குடும்ப நலம், தற்கொலை எண்ணம் போன்ற சுகாதாரம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தகுந்த ஆற்றுப்படுத்தும் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

இதற்கான விழிப்புணர்வு பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் விளம்பர துண்டு பிரசுரத்தை இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆப., அவர்கள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்தார்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.